Regd No. M. 1630. JUNE 1922.

சுயம்பிரகாசத்துணை.

ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்தி

GNANA SURIYA

A HIGH CLASS TAMIL MONTHL

மலர் 1 } துந்துபீ-வரு ஆனீ-மீ 1
1922-வரு ஜூன்-மீ 1

Vol 1

பொருளடக்கம்.

விஷயம்.

கடவுள் வணக்கம்
பத்தி மகத்துவம்—வேதாந்த பாஸ்கரன்
இராசயோகம்—யோகாசியம்
மனோலயம் ஷி
உண்மை—மணிமுத்துநாயகம்
வருணதரும விளக்கம்—V. சேஷாத்திரி
காந்த வைத்தியம்—முகையத்தின்பாக்ஷா
கற்புடைமை—V. சேஷாத்திரி
வைத்தியத்தோகுதி—காதர்பாக்ஷா ஸா
நற்போதம்—V. சேஷாத்திரி

இப் பத்திரிகையிலுள்ள விஷய

எவரும் பிர

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முத லிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
மலேஷியா, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஏஜண்டுகாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

பத்திரிகையாய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாம். பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங் சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் ாழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்த தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தா களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்

விளம்பர விகிதம்.

ருமாசத்திற்கு	...	ரூபா	8—0—0
,,		,,	5—0—0
,,		,,	3—0—0

த்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் ரூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் யனுப்பவேண்டும்.

விஷயங்கள்.

ாயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளி

கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற் விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண பத்திராதிபர்.

சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான யம்.

ழப் புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

மஸ்தான் சுவாமிகள்
பர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத் துணை.

ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1 } துந்துபி-ஆடு ஆனி-மீ 1உ — ஜூன்-மீ 15உ { இதழ் 3

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துறித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரகாசியார்.)

சாத்திரத்தாலளவுபடாத்தனிமுதலேப்பாரபாத்தைத்தானேதானு
மாத்திரமாய்நிற்பதனேவாய்விட்டுப்பேசாதமௌனவைப்பைக்
காத்திரவாதனேகடந்தவறிஞருக்குப்பலமீயுங்கற்பகத்தைப்
பார்த்தலிடந்தொறுங்கழும்பரமாகியப்பொருளேப்பணிதல்செய்வாம்.

காதெலனுலேகேட்குங்கண்ணெனுலேகாணும்
ஓதுநாலெனுலுண்ணுமூடலெனுலேயோரு
மோதமூக்கெனுன்மோக்குமூச்செனுலேயோடும்
போதெனுற்போய்மீளுமனடிபோற்றுகிற்பாம்.

(சிவஞானவள்ளல்.)

ஞானசூரியன்.

தந்துபி-வரு ஆனி-மீ 16

சோதிசொரூபமே துணை.

"வேதாந்த பாஸ்கரன்" நாண்கரம் பரகமாகிய

பத்தி மகத்துவம்.

பத்தி என்னும் வாக்கியத்திற்கு அன்பு, நம்பிக்கை, விசுவாசம், ஆசை, காதல், நேசம், தயை முதலான பற்பல பரியாய நாமங்களுண்டு; அவையனைத்தும் ஒரு பொருட் பல பெயர்.

பத்தி என்னும் அன்பு நானவிதமாகும். நாயகன் நாயகிகளுக் கிடையில் பிரகாசிக்கும் அன்பிற்கு காதல் என்றும், சினேகர் உறவினர்களுக்கிடையிலுண்டாகும் அன்பிற்கு நேசமென்றும், மிருகங்கள், பட்சிகள் முதலான ஜீவ பிராணிகள் மீதுண்டாகும் அன்பிற்கு தயை, கிருபை, காருண்யமென்றும், கடவுள் மீதும், சற்குருபீரான்மீதும், ஏற்படும் அன்பிற்கு பக்தி என்றும் பெயர்.

பக்தி என்னும் அன்பானது பூரண நம்பிக்கை விசுவாசத் துடன் கடவுளை தரிசித்து அவருடன் இரண்டறக்கலத்தலாகிய சீவப்பிரமைக்கியம் அடையும்பொருட்டு இடைவிடாத தியான சொரூபமாகப்புரியும் அரிய பெரிய முயற்சியாம். அத்தகைய முயற்சியானது தைலதாரைபோல் இடைவிடாமல் கடவுளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்குமாகில் சர்வ பாச பந்தங்களும் நீங்கப்பெற்று மோட்சம் அடைவதற்கும் ஏற்ற சாதனமாகும். அஃது தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும்.

தலையன்பு :—கண்ணப்ப நாயனாருடைய அன்பையும், தன் பிராணநாயகன் உயிர்நீங்கினனென்று காதிற்கேட்டவுடனே, தன் னுயிரையும் இழக்கின்ற நாயகியின் அன்பையும் தலைமையான பேரன்பு என்று சொல்லப்படும்.

இடையன்பு:—அரக்கும், மெழுகும் அனலிக்கண்டபோது சிறிது சிறிதாக மெல்ல உருகுதல்போலத் தமக்கன்பாயுள்ள ஓர் வஸ்துவை நேரிற் காணுங்காலத்தில்மாத்திரம், மனமானது உருகிப் பாவசமடையும். அவ்வஸ்து பார்வையைவிட்டு நீங்கினால் அந்த அன்பும் அங்ஙனமே நீங்கிவிடும். அதையும், தன்நாயகன் மரித்தபின் உடன்கட்டையேறுபவளுடைய நடித்தசமான அன்பையுமே இடையன்பு என்னப்படும்.

கடையன்பு:—ஓர் ஆயுதத்தை நெடுநேரம் தீட்டத் தீட்டக் கூர்மையுண்டாவதுபோல், அன்பனும், அன்பிற்குரிய வஸ்துவும் நெடுங்காலம் பழகியபின்னரே அந்த அன்பு உதயமாகும். அஃது எவ்வளவுக் கெவ்வளவு பிரிவேற்படுகின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்த அன்பும் நீங்கிவிடும். அதையும், நாயகனது பிராணன் பிரிந்தபின் சில மாதம்வரையில் நினைப்புவந்த சமயத்தில் அவனை நினைந்து நினைந்து அழுதுகொண்டிருக்கின்ற நாயகியின் மந்தசமான அன்பையுமே கடையன்பு என்று சொல்லப்படும்.

மூதன்மையான தலையன்பு என்பதை இக்காலத்திற் காண்பது மிகவும் அருமை.

தலையன்பு என்னும் பிரதம அன்புவாய்ந்த உண்மையான பக்திமானுபிருப்பவர்கள், பிரபஞ்சத்தோற்றமான வீண் விவகாரங்கட்கெல்லாம் முற்றிலும் விலகியேபிருப்பார்கள். உலக விவகாரத்தில் பற்றுள்ளவரையில், அன்பு என்னும் பயிரானது கதிர்வாங்கிப் பூரணமாய் விளைவது அருமை.

கடவுளை நோக்கி நிட்காமியமாய் பக்தி செலுத்துபவர்களே பூரண ஆனந்த கோசரமுடையவர்கள். அவர்கள் எப்போதும் மலர்ந்த முகத்துடன் (*) காம குரோத லோப மோக மத மாற்

(*) காமம் என்பது:—மாதர்களின்மீது அதிக விருப்பம் வைத்தல்.

குரோதம் என்பது:—கோபாவேசத்தால் முருவருத்தல் வெறுத்து விலக்குதல்.

லோபம் என்பது:—தன்னு திரவியத்தை எவ்வித நல்வழிகளுக்கும் செலவிடாமல் பூதத்தைப்போல் காத்துக்கொண்டிருத்தல்.

கரியமென்னும் சட்கருமங்களிற் சிக்கியுழலாமல் சுதா சுந்தோஷ கரத்துடனேயே இருப்பார்கள். கிரியை, யோகம் இவை களைப்பார்க்கிலும் அன்பு பல்லாயிரமடங்கு பெருந்தன்மையை யுடையது. கிரியை, யோகம் இவைகள் புறத்தோற்றமாகிய அதிசயானந்தமுடையது. அன்பானது அகத்தோற்றமாகிய நிரதிசயானந்தத்தை விளைவித்து வாசாமகோசர வாழ்க்கையாகிய ஆனந்தசாகரத்தைத் தன்னுள்ளே அடக்கிக்காட்டுவது. ஆதலால் அன்பிற்குமேலான முத்திமார்க்கம் எக்காலத்திலுமில்லை.

அன்பாற் கரைந்து கண்ணீ ராறுகண்ட புண்ணியருக்
குன்பால் வரவழிதா னுண்டோ பராபரமே.

சிறு குழந்தைகளுக்கு இது சுத்தம் இது அசுத்தமென்றும், இவர் பகைவர் இவர் உறவினரென்றும், இவர் பெரியவர் இவர் சிறியவரென்றும், பேதாபேதந் தெரியாது. அதுபோலவே அன்பு செலுத்துபவர்களும் பேதாபேதமில்லாத களங்கரகிதமான வஞ்சகமற்ற திருதயத்தினுல் கடவுளைக் காண முயற்சிக்க வேண்டும். பேராசை, சோபம், வஞ்சகம், பொறாமை முதலிய வைகள் எவ்வளவுகாலம்வரையில் நம்மிடத்தைவிட்டு நீங்கா மலிருக்குமோ அவ்வளவு காலம்வரையில் நாம் கடவுள் காஷ்மியை தரிசிக்கமுடியாது. கடவுள் சுதந்தரமில்லாதவர், அவர் உண்மை யான தலையன்பு என்னும் இரும்புவலையிற் சிக்கிக்கொள்பவர் எவ்விதமான முகாந்தரத்தைக்கொண்டும், அந்தப் பத்திவலையி னின்றும் அவர் தப்பித்துக்கொள்ள முடியாது. தப்பிக்கவும் நினையார். ஏனைய கிரியாவலையில் ஒருபோதும் அகப்படார், அகஸ்மாத்தாக அகப்படினும் அந்த வலையைக் கிழித்துச் சின்ன

மோகம் என்பது :—தன தாளிய புத்திர பௌத்திராதிகளின்மீது அதிக விருப்பமவைத்தத், தனக்குண்டாயிருக்குமபொருள் போதா தென்று மேன்மேலும் சம்பாதிக்க விரும்பிப் பேராசைப் பட்டலைதல்.

மதம் என்பது :—செல்வச்செருக்கினுல் பிறரை மதியாமல் தன் மனம்போன போக்காய் நடத்தல்.

மாற்சரியம் என்பது :—பிறர் அனுபவிக்கும் சுகத்தைக்கண்டு பொறாமைகொண்டு மனம அழுகல்.

பின்னப்படுத்திவிட்டு வெளியேறிவிடுவார். கடவுளானவர் தமது வேதாகமங்களில் "உண்மையான எனது பக்தர்கட்கு நான் கட்டுப்பட்டிருக்கிறேன்" என்று திருவாய்மலர்ந்திருக்கின்றனர். இதற்கு உதாரணமாவன :—

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சகாதேவனை நோக்கி பாரதயுத்தம் நடக்காமலிருப்பதற்கும் எல்லோரும் பிழைத்திருப்பதற்கும் ஏதாவதுபாயம் உண்டாகில் சொல்லென்று கேட்க, சகாதேவன் கண்ணீர் ததும்பிநின்று சுவாமி! துரியோதனன், தருமராஜன் இருவரையும் நாட்டைவிட்டு காட்டிற்கு விரட்டிவிட்டு இப்பூமண்டலத்தைக் கர்ணனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து கர்ணனைப் பகைத்திருக்கும் அர்ச்சுனனை முந்தி சங்கரித்து பின்பு பந்து மித்திரர் பலருடைய தலையை வாங்கக் கூந்தலை விரித்திருக்கும் துரோபதையைத் தலை மொட்டைசெய்து காலில் விலங்குமிட்டு என்னெதிரில் நிற்கும் உம்மையும் கைப்பிடியாகப்பிடித்துக்கட்டிவிடுவேனுகில் இப்பாரதயுத்தம் நடவாமல் செய்யலாமென்றனன். இதைக்கேட்ட கிருஷ்ணன் நீ சொல்லிய காரியங்களையெல்லாம் எளிதிற் செய்துவிடலாம். ஆனுல் என்னைக் கைப்பிடியாகப் பிடித்துக் கட்டிப்போடவேண்டுமென்றுயே? அது உன்னுல் இயலுமா? என்றார். அதற்கு சகாதேவன் சுவாமி! உமது உருவத்தை உண்மையர்ய்க் காட்டினுல் உமது அடியார்க்கடியாரில் ஒருவனுகிய யான் உம்மைக்கட்டுவது உண்மையென உறுதியாக மொழிந்தான். கிருஷ்ணபகவான் அவனது மொழியைச் சோதிக்க, "சகாதேவ! நல்லது, கட்டு பார்ப்போம்", என மொழிந்து தமதிச்சையினுல் பதினுயிரம் வடிவுகொண்டு அந்த ரங்கமண்டபம் முழுதும் வியாபித்து நின்றனர். பரிசுத்த மனமுடைய சகாதேவன் அந்த ரூபங்களுக்குள் ஆதிமூலமாகிய ரூபத்தைத் தம் மெய்யறிவினுலறிந்து மூவுலகுமளந்த உபயசரணாரவிந்தங்களையும் தனது இருதயமென்னும் சுயிற்றினுல் இறுகக் கட்டினுன். உடனே அனந்தரூபமாய் நின்ற ஆதிமூலம் ஓர் உருவமாப்ப் பிரத்தியக்ஷமாகி சகாதேவனைப் பார்த்து பக்தி

என்னும் வலிய கயிற்றினால் என்னைக் கட்டியமைத்தனர். என் யாதங்களைக் கட்டவிழ்த்துவிட்டுவிடு என்று சொல்ல சகாதேவன் அவரை மிகந்துதிசெய்து நோக்கி சுவாமி கொடிய இப்பாச யுத்தத்தில் தங்களைத்தஞ்சமென்று அடைக்கலம் புகுந்த எங்கள் ஐவரையும் கடாக்ஷித்தருளவேண்டுமென்று அவருடைய திருவடி களில் நமஸ்கரிக்க, "ஐவரையும் ரக்ஷிக்கிறேன்", என்று சொல்ல சகாதேவன் கட்டவிழ்த்துவிட்டனனும்.

அன்பாலின்னெய்யறிற்பேபிணித்தமைநன்
றென்பாதந்தனையினிவிடுகென்றுரைப்ப
வன்பாசப்போரிலவந்தடைந்தேமையுமை
நின்பார்வையாற்காக்கவேண்டுமெமாலே.

திருப்பனந்தாளென்னும் திருப்பதியில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருந்தமையால் அதனை நிமிரப்பண்ணி கும்பிடுதற்கு விரும்பி சோழமஹாராஜன் தம்முடைய யானை களெல்லாவற்றையும் பூட்டி இழுப்பித்தார். இழுப்பித்தும் அது நிமிராமையால் அகோராத்திரம் தீராத கவலையுற்றிருந்தார். குங்குலியக்கலய நாயனார் தற்செயலாய் அச்சமயம் சுவாமி தரிசனம் செய்யும்பொருட்டுத் திருப்பனந்தாளை அடைந்தார். அங்கே சிவலிங்கத்தை நிமிரப்பண்ணவேண்டுமென்கிற ஆசையால் அரசன் வருத்தமுறுதலையும், சேனைகள் யானை களோடு சிவலிங்கத்தை இழுத்துத் தங்கள் கருத்து முற்றுமை யால் பூமியின்மேலே வலிகுறைந்து விழுந்து இளைத்தலையுங் கண்டு, மனதிலே துன்பங்கொண்டு, "அடியேனும் இளைப்பைத் தருகின்ற இத்தத் திருப்பணியைச் செய்யவேண்டும்" என்று விரும்பி, சிவலிங்கத்திலே கட்டப்பட்ட கயிற்றைத் தம் கழுத் திலே கட்டிக்கொண்டு இழுத்தார். உடனே சிவலிங்கம் நிமிர்ந் தது. அப்படி நிமிர்ந்தது அவர் புறத்திலே கட்டியிழுத்த அக் கயிற்றினாலோ? அன்று; அகத்திலே கட்டி யிழுத்த அன்புக் கயிற்றினாலேயாம்; என்பது பெரியபுராணத்தின் கூற்று.

ஆகையால் ஒரு மனிதன் அன்பென்னும் வழிகாட்டியின் மூலமாகவே கருணையங்கடலாகிய கடவுள் செய்யுங் சன்னி தானத்தைக் கைதலாமலகம்போல் கண்குளமுடியும். (வரும்).

இராச யோகம்.

(35ம் பக்கத் தொடர்ச்சி).

நீர் இரண்டாவது கண்டது எனது தம்பியும் யோக்கியனே! ஆனால் அவனுக்கு வாய்த்த பிணவியோ! விருதுபட்டிக்குப் போகிற சண்டையே! என் வீட்டுவரையிலும் வந்துவிட்டுப்போ என்று ஊர்ச்சண்டையை விலைகொடுத்து வாங்குபவள். அந்தச் சச்சரவை விலக்கிவிடுவதே பொழுதுவிடிந்தால் வேலையாயிருக்கிறுன். அந்த விசாரத்தாலேயே அவனும் தளர்ந்துபோனுன்.

என் மனைவியோ! அவ்வாறன்று. பத்தாவுக்கேற்ற பதிவிரதை; அடுத்த வீடு இன்னதென்றே அறியாத உத்தமி; நாங்கள் இருவரும் பூவும் மணமும்போலும், உடலும் உயிரும் போலும் ஒற்றுமையாக வாழ்கின்றேம்; கவலை யென்பதின் சொரூபமே இன்னதென எங்களுக்குத் தெரியாது; கவலையற்றவன் கடவுளைப்பெற்றவன் என்பதற்கிணங்க, எனக்குக் கவலை வராதிருப்பதாலேயே இவ்வளவு திடகாத்திரமாய் இருக்கின்றேனேயன்றி, காயகித்திமுதலியவைகள் நான் செய்திருப்பேன் என்று நீர் கனவிலும் நினைக்கவேண்டாம் என்று சொல்லி அனுப்பினர் என்று நிருவாய் மலர்ந்திருக்கிறீர்கள்.

இந்தக்கதையினுல் சஞ்சலமற்றவர்களே பிரபுக்கள் என்று புலப்படுகிறதல்லவா?

(§) ஞாதுரு ஞான ஞேயம் என்னும் இவையாவும் மனதின் கற்பனை மாத்திரமாய் இருத்தலால் அதற்கு மனம் என்று கூறலாயிற்று. காணப்பெறுவதாகிய இப்பிரபஞ்சம் அனைத்தும் மனதிற்கு தோற்றப்படுவதாகிய திரிசியமாம். மனதின் சங்கற்பம் இல்லாவிடின் உலகம் தோன்றுவதில்லை. மனம் இலயமானுல், துவைத நாட்டமும் இலயமாகி அத்துவைதமாகின்றது.

பின்னுல் கூறியுள்ள சாம்பவி முத்திரை என்னும் மகுடத்தின் கீழ்கூறியுள்ள நாதவுபாசனை (நாதாநு சந்தானம்) என்னும்

(§) ஞாதுரு காண்போன், ஞானம் காணும் அறிவு, ஞேயம் (ஞேயம்) அறியப்படுபொருள். இதற்கு திருஷ்டி, திரிசிய, விவேகம எனவும் பெயர்.

கசவித நாதகீதமாகிய தேவகானங்களைக் கேட்டு ஆனந்தபரவசம் அடையச்செய்வதும், இந்த இராசயோகத்தினால் அடையப் பெறும் இன்றியமையாத பெரும்பயனும். இத்தகைய மகத்துவம் வாய்ந்த இராசயோகமில்லாமல் அடயோகமும், அடயோகமில் லாமல் இராசயோகமும் சித்திக்காது. நெய்யை உபயோகப் படுத்திக்கொள்ளும்வரையில் தொன்னையையும் காப்பாற்ற வேண் டியது போன்றும், உப்பரிகையில் ஏற விருப்பம் உடையவர்களை வணியானது வருத்தமின்றி அவர்களை அவ்வி—த்தில் சேர்ப்பித் தல் போன்றும், உன்னதமாகிய மேற்பூமியையுடைய இராச யோகத்தில் ஏற விருப்பமுடையவர்களை இந்த அடயோக மானது வருத்தமின்றிச் சேர்ப்பிக்கின்றது. இஃதன்றி மந்திர தந்திர யோகங்களினாலும், சகுண நிர்க்குணத் தியானங் களினாலும் இராசயோகத்தைக் கிட்டமுடியாது. இதுகாரணம் பற்றியே இராசயோகம் சித்திக்கிறவரையிலும் அடயோகத்தை அநுசரித்துத் நிரவேண்டும் என்பது கருத்து. அடயோக மாகிய பிராணயாமயோகம் கைகூடாவிடின் ஞானம் சித்தியா தென்பதே முடிவான துணிபு.

யோகம், ஞானத்திற்குச் சாதனமானது யோகத்தினால் விஞ்ஞானம் சித்திக்கின்றது. ஞானத்தினால் யோகம் பிரகாசிக் கின்றது. பிரகாசம் பொருந்திய இரத்தினக்கற்கள் சாணையில் தீட்டப்படாவிடின் எப்படிப் பிரகாசிக்காதோ, அப்படியே அப்பியாச யோகமின்றி ஞானம் பிரகாசியாது. ஆகலின், யோகத்திலிருந்து ஞானத்திற்குப் போகிறவர்களுக்கே மூறை யாகச் சகலமும் சித்திக்கும். இதுகாரணத்தாலேயே உரோமரிஷி

'யோகமில்லா ஞானமென்ன வீண் வீணையா'

என்று கூறியுள்ளனர்.

தாயுமான வள்ளல்.

யோகியர்க்கே ஞானம் ஒழுக்காம் பேரன்பான
தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே.

லிரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிக ளன்றே ? பராபரமே.

கூர்மபுராணம்.

மன்னிய யோகத்தன்னல் ஞானம் வந்தெய்தமந்த
உன்னரும் ஞானத்தன்னல் யோகம்வந் தெளிதினெய்தம்
இன்னவையிரண்டுங்கைவந்திறைஞ்சினேன் றனக்கியான்மற்
றன்னியனல்லன் அன்னேன் றன்னுடனொருவனுமென்.

இன்னணம் பிரமமாகும் சாங்கியம் இசைத்தோமிதின்
மன்னுறமனதைச் சேர்த்தன் மாண்புடை யோகமாகும்
பன்னரும் ஞானம்யோக காரணம் பழிப்பில்யோகம்
தன்னுதற்கரிய ஞான காரணமாகித் தோன்றும்

யோகியாயடைந்த முத்தி சாங்கியருற்றுவாழ்வர்
சேகெறி யோகத்தோடு சாங்கியத் தெளிவு தன்னே
பேகமாயெண்ணி னொன்றைத் தந்தல மறிந்தோ ரென்னச்
சோகமோகங்கள் செற்ற தொல்லை மாமுனிவர் சொல்வார்.

மனோலயம்.

இதன்பின் கூறியுள்ளவாறு பிராணாயாமத்தை அநுட்டித்து மனம் சாந்தத்தை அடைந்தபிறகு பிரத்தியாகாரத்தை அநுட்டித்தால், மனமானது விடயங்களில் ஓடித்திரியாமல் அமைதி பெற்று நிற்கும். ஆனல் மனத்தை அடக்கிவைப்பதென்றல் சாதாரணியமல்ல.

விக்கிரமாதித்தன், முருங்க மரத்தில் தொங்கிய வேதாளத்தைப் பிடித்துக்கொண்டு வரும்போது, அது சொல்லும், பொருள் அறியமுடியாத கதையை விக்கிரமாதித்தன் விடுவித்த உடன், கட்டவிழ்த்துக்கொண்டு மறுபடியும் முருங்கமரத்தில் ஏறிக்கொள்ள மீட்டும் மீட்டும் பிடித்துப் பிடித்துக்கட்டிக் கடையாக வசப்படுத்திக்கொண்டுவந்தான் என்னும் கதையைப் போல், ஓடித்திரியும் மனதைச் சிறிது சிறிதாக (வாயுவை அடக்கி வசப்படுத்துவதுபோல்) அடக்க முயலவேண்டும். இவ்விதமாக மனத்தை அடக்குவதற்குத்தான் பிரத்தியாகாரம் என்று பெயர்.

போலீஸ் உத்தியோகஸ்தர்கள், தமக்கு யாரிடமாவது சந்தேகந்தோன்றினால், அவன் என்ன செய்கிறான்? எது பேசுகிறான்? எங்கே போகிறான்? என்று மறைவாக நின்று ஆராய்வதுபோல், மனமானது விடயங்களிற் பற்றிக்கொண்டிருக்கையில், மனிதன் தனது சித்தத்தை அதனோடு கலவாமல் வேறாக நின்று, இப்போது மனம் என்ன நினைக்கின்றது? என்று ஆராய்ந்தால் மனதிற்குத் தனியாக ஒன்றை நினைப்பது அசாத்தியமாகும். ஆனால் ஓடி அலைந்து திரிவதே இயற்கையாகவுடைய மனதைச் சிலகாலம் அடங்கப் பழகிவிட்டுத் திரும்பவும் விட்டு விட்டால், அது சாமானியத்தில் வழிக்கு வராது. அன்றியும், சூக்குமமாயுள்ள மனமானது வேறாகவும், தான் வேறாகவும் பார்த்துக்கொண்டிருப்பது பெரும்பாலாரால் முடியாத காரியம். ஆகையால் அப்பியாச ஆரம்பத்தில் மெஸ்மெரிஸக் காரர்போல் சடப்பொருளின்மீது மனமானது சிலகாலம் நிற்கப் பழகிக் கொண்டு, அதன்பின் மனம் என்பது யாது? அது எங்கே யிருந்து எப்படி யுதிக்கிறது? என்று சரீரத்தை விட்டுப் புறத்திற்போகாதபடி ஒவ்வோர் உறுப்பிற் பதியும்படி அடிக்கடி கவனித்துக்கொண்டே வந்தால், அதனுடைய வேகம் நாளுக்கு நாள் குறைந்து நமதிஷ்டப்படி நடக்கும். சிலர் மனமானது பிரபஞ்சத்திற் சொல்லாதவண்ணம் எப்போதும் அதை ஒரு முன்னிலையாக வைத்து, ஒரு மனிதனுடன் பேசிக்கொண்டிருப்பதுபோலவே அதனுடன் பேசிக்கொண்டிருந்து, அதன் விருத்தியை அடக்கிவிடுகிறார்கள். இவ்வாறு மனதை அடக்கிய பின்பு அதை ஏதேனும் ஓர் இலட்சியத்தில் நிறுத்தி அதையே சிந்தித்துக்கொண்டிருக்கும்படிச் செய்தல்வேண்டும். இப்படிச் செய்வதற்குத்தான் தாரணை யென்று பெயர்.

இத் தாரணையை பசுமையாயும், ஏகாந்தமாயும் மனோலாசமாயும் நிசப்தமாயும் இருக்கிற ஓரிடத்திலிருந்து பழகுவது நன்மை. சிலகாலம் வரையில் இவ்வாறு பழகி வந்து தேர்ச்சியடைந்தபின் ஒரு இலட்சியத்தில் மனமானது நீடித்த காலம்

நிற்கப் பழகுதல் வேண்டும். இவ்வாறு செய்வதற்குத்தான் தியானம் என்று பெயர்.

இந்தத் தியானம் அதிகரிக்க அதிகரிக்க இலட்சிய முதலான சொரூபங்கள் மறந்து பிரக்ஞையற்று சைதன்னியமாத்திரமாய் நிற்றலே சமாதியாகும். இதன் முழுவிபரம் வேதாந்த பாஸ்கரன் முதற்பாகம் என்னும் ஞான சூரியன் அட்டாங்கயோக அத்தியாயத்திற் பார்த்து நன்குணர்க.

(வரும்) யோகாசியம்.

உண்மை.

உண்மையானது தவத்திற்கு அங்கமாகிய இயமம் 10 என் பதில் ஒன்று. உண்மையல்லாத ஏதாவதொன்றை யுரைப்பது குற்றமும் பாவமுமாவது மாத்திரமேயன்றி, உரைப்பவனுடைய அறிவின்மையை விளக்குவதுமாகின்றது. ஆகவே பொய்மொழி புகல்வது பூரியோர் செய்கையென்பது எல்லாரும் அங்கைக்கனி போல் தெளிதினுணர்ற்பாலதே யாயினும், பொய் வார்த்தைகள் உலகில் எக்காலத்தும் சாதாரணமாயிருப்பதைக் காணுமிடத்து அதிசயம் மேன்மேலும் பெருகாகிற்கின்றது. தன்னுற் செய்யப்பட்ட ஒரு குற்றத்தை ஒளிக்கும்பொருட்டாயினும், தண்டனை கேரிடாதபடி தடுக்கும் பொருட்டாயினும், ஒருவன் ஒரு பொய்யை உரைத்தாலும், ''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்'' என்பது சத்தியமாதலின், உண்மை எவ்விதத்திலும் வெளிப்படாமற் போவதில்லை. அதன்பின்னர், குற்றஞ் செய்ததனாலுண்டான வெட்கத்தோடு பொய்பேசின வெட்கமுஞ் சேர்ந்து, மானக்கேடு பெருகிவிடுகின்றதேயொழிய, மொத்தத்தில் பொய்யினால் விளையத்தக்க நன்மை ஒரு சிறிதுமின்று.

தாயுமானவள்ளல்.

பொய்வளரும் நெஞ்சினர்கள் காணுதற் காட்சியே
பொய்யிலா மெய்ய றிவிற்
போதபரி பூரண அகண்டிதா காரமே
போக்குவர வற்ற பொருளே.

இராமலிங்க வள்ளல்.

பெருமைபெறு கினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்.

ஆகையால், யாதொரு குற்றத்தைச் செய்துவிட்டவன் வாய்மையை உரைப்பதே உசிதமாகும். உண்மையில் நாம் ஒரு குற்றத்தைச் செய்திருந்தால் அதற்காகத் தண்டிக்கப்படுவது தகுதியே யென்பது நமக்கு நன்றாகத் தெரிந்தவிஷயம். ஆகவே, அந்தத் தண்டனைக்குப் பயந்து அதனைத் தவிர்க்கும்பொருட்டு ஒரு பொய்யைச் சொல்லித் தப்பித்துக்கொள்வோமாயினும், நம் முடைய மனச்சான்று வாளா பிருப்பதில்லை.

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ் சே தன்னைச் சுடும்"

என்றார் கூறுது நாயனார்.

நாம் புரிந்த குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் இன்னும் தண்டனை இரட்டிப்பாகுமேயென்று நம்முடைய மனம் அச்சமேலிட்டினால் பொய் சொன்னதற்காக நம்மை அல்லும் பகலும் வருத்திக்கொண்டேயிருக்கின்றது. அதனால், அதிகாரியின் சிட்சைதப்பினலும், நமக்குநாமே உண்டாக்கிக்கொள்ளும் சிட்சைக்குத் தப்பி உய்யவொண்ணுது.

நாம் பொய்பேசின செய்தி வெளியாகிவிட்டால் நம்முடைய யோக்கியதை ஒரு சிறிதும் பயனற்றதாகிவிடுவதுமன்றி, நம் முடைய தாய்தந்தையர் முதலான எவரும் நம்மிடத்தில் அணுவளவேனும் நம்பிக்கைவைக்கமாட்டார்கள்; பிறகு ஒருசமயம் உண்மையைப் பேசினும் ஒருவரும் நம்மை நம்பார். இதுவுமன்றி, பொய்சொல்வதில் இன்னுமொரு இடுக்கண் வினைகின்றது. பொய் சொல்லப் புகுந்தால் ஒரு பொய்யோடு அப்பாவம் ஒழிவதில்லை. முதலில் சொன்ன பொய்யை ஒளிக்கும்பொருட்டு வேறொரு பொய்யைச் சொல்லவேண்டிவரும். அதற்கு ஆதாரமாகப் பிறிதொரு பொய் பேசவேண்டி நேரிடும். அங்ஙனமாக

ஒரு பொய் சொன்னவன், அதை ஸ்தாபிக்கப் புகின், ஒன்பது பொய் சொல்லவேண்டியதாகின்றது.

பொய் வார்த்தையை யுரைத்து நமது பிதா, மாதா முதலானவர்களை ஒருவாறு வஞ்சித்தாலும், சர்வாந்தரியாமியாயுள்ள கடவுளை வஞ்சிக்க எக்காலத்திலும் முடியாதே! உண்மையையே உரைத்தல் வேண்டுமெனக் கடவுள் ஆதி முதற்கால் கட்டளையிட்டிருக்கின்றனராகையால், பொய் சொன்னவர்களை அவர் கடுமான தண்டனைக்குட்படுத்துவரென்பதற்கு ஐயமேயில்லை.

உண்மையல்லாததை உரைக்காமலிருப்பதுமாத்திரமே போதாது. பொய்மொழியாகொன்றையுந் தவிர்தலும்வேண்டும். உள்ளப்பான்மையே ஒருவரிடத்தில் கட்புடையார்போல கடித்தல் வஞ்சகமாகுமன்றே? அங்ஙனமே, ஒருவர் உரைப்பது நமக்குச் சம்மதமாகாதிருக்கையில், அதற்குச் சம்மதிப்பதுபோலப் பேசுவோமாயின் அதுவும் உள்ளும் புறமும் ஒவ்வாத வஞ்சகமேயாகும். ஒருவனுக்கு நாம் உண்மையை உரைத்தலிடத்தும், அவன் நாம் உரைத்ததை உள்ளபடி அறிந்துகொள்ளாமையால் நமக்கு ஒரு நன்மையுண்டாவதாயிருக்கின், அந்நன்மையின்பொருட்டே, அவ்வுண்மையை இன்னும் செம்மையாக விரித்துரையாமல் அந்தப் போக்கிலே விட்டுவிடுவதும், வஞ்சகத்தின் பாற்பட்ட குற்றமேயாகும்.

தற்புகழ்ச்சியும் விஸ்தாரவார்த்தையும் பொய்வார்த்தைக்கு வாயில்களாதலின் அவற்றையும் ஒருதலையாகவே ஒழித்தல் வேண்டும். பொய்கூறலாகிய பாவம் ஒன்றை ஒழித்தால், அதுவழியாக ஏனையபாவங்களும் தாமே ஒழிந்துவிடும்.

பொய்யாமை என்னும் அறத்தை மாத்திரம் ஒருவன் கண்டுப் பிடிப்பானாயின், மற்றெல்லா அறங்களும் தாமே வர்தமையுமாதலானும், எல்லா அறங்களையும் செய்யச் சின்னட்பல்பிணிச் சிற்றறிவுடைய மானிடர்க்குக் கூடாமையானும்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்றார் திருவள்ளுவரும். ஒவ்வொருவருக்கும் இயற்கையில் வாயினிடமாக உதிப்பது மெய்யே யாதலின் மெய்மைக்கு வாய்மையென்ற பெயர். ஆகவே, பொய்பேசுவது சிரமமான காரியமென்றும், மெய்பேசுவது சுலபமான காரியமென்றும் ஏற்படுகின்றது.

திருக்குறள்.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

நாலடியார்.

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்; தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா லுயிர்காயம் பெய்தடினுன்
கைப்பரு பேய்ச்சுரையின் காய்.

பொய்யுலகில் பொய்வாழ்க்கையையே மெய்வாழ்க்கையாக நம்பி பந்தத்தில் சிக்கியுழலும் சாதாரண ஜனங்களே பாவத்திற்கு மிகவும்பயந்து கோலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமாபாதகங்களில் பொய்யும் அதில் சேர்ந்ததே யென அஞ்சி மெய்பேச முயலும்போது பொய்யை ஒழித்து மெய்யை விரும்பி ஆன்மலாபம் அடையச்சென்று மகான் என்ற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டவர்கள் பின்னரும் பொய்யும் புரட்டுமாகவே தனது வாழ்க்கை வீணாட்களாக்கி ஏழை ஜனங்களை ஏமாற்றி காலங்கழிக்க முயல்கின்றனரென்றால் இதைப் பார்க்கிலும் வேறொரு அதிசயமும் வேண்டுமோ! அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! இத்தகையோர் இனிமேலாவது தூற்புத்திகளையொழித்து நற்புத்தியுடன் உண்மையைக் கடைப்பிடித்தொழுகுமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றனம்.

விவேக சிந்தாமணி.

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியுண்டாம் ஆலுலும்
பொய்யே ஆகா
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறை போல் தவக்குறையும்
மிடியுண் டாகும்
தெய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால் வறுமைபினி
தொலையா வென்றும்
உய்பவருள் தேசிகர்க்குப் பொய்யுரைத்தால் நரகமது
உண்மை தானே.

மணிமுத்துநாயகம்.

வருண தரும விளக்கம்.

பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திர என சாதிகள் நான்காகப் பிரிக்கப்பட்டு தொன்று தொட்டு வழங்கிவருகின்றன. நான்காவதாகிய சூத்திர சாதியில் கருமபேதத்தால் வேறு சாதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆசாரம், ஒழுக்கம், ஞானம், இம்மூன்றும் உள்ள சாதியாரே மேலான சாதியாரெனப்படுவர்.

அறிவுடையா ரெல்லா முடையர் அஃதிலார்
என்னுடைய ரேனு மிலர்.

அந்தணரென்போர் அழகிய சாந்தகுணமுடையவரென்றும், பிராமணர்களென்போர் பிரமத்தை உபாசிக்கிறவர்களென்றும், பொருள் கூறுவர் பெரியார். நாயனாரும்,

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லால்

எனக் கூறியுள்ளார்.

மேற்கூறிய ஆசாரம், ஒழுக்கம், ஞானம் இம்மூன்றும் பிராமணசாதிக்கே இன்றியமையாதது. இச்சாதியில் பிறக்க வேண்டுமென்றால் பூர்வ ஜன்மத்தில் மிக்க புண்ணியஞ்செய்திருத்தல் வேண்டும். இச்சாதியில் பிறந்தால் மட்டும் போதா. B. A. கிளாசுக்கு வருவதால் மட்டும் பயனில்லை. அவ்வகுப்பிற்குரிய பாடங்களைக் கடைதேறற்றுப் பரீட்சையில் தேறினால்தான் B. A. என்ற பட்டம் கிடைக்கும். அதுபோல் ஆசாரத்தில் தவறு

மலும், ஒழுக்கத்தில் வழுவாமலுமிருந்து ஞானத்தைத் தேடிக் கொண்டால்தான் பிராமணன் என்ற பட்டம் கிடைக்கும். பிறப்பு நலந்தருமோ? என்றார் கபிலர்.

காண்கு சாதியில் உயர்குலத்தினனுகிய பிராமணனுக்கு கல்வி, அறிவு முதலியவை இல்லாவிடின் அவன் கடையோனுவான் என்ற கருத்தையடக்கி அதிவீராமபாண்டியர்

நாற்பாற் குலத்தின மேற்பா லொருவன்
கற்றிலனுயிற் கீழிருப்பவனே

எனக் கூறியுள்ளார்.

ஆசாரம், ஒழுக்கம், ஞானம் இம்மூன்று முள்ளவரே உத்தமப் பிராமணனெனப்படுவர். ஆசாரம், ஒழுக்கம் இரண்டு மிருந்து ஞானத்தைத் தேடிக்கொள்ளாவிடில் மத்திமப் பிராமணனெனப்படுவர். ஞானம், ஒழுக்கம் இரண்டுமில்லாமல் ஆசாரம் ஒன்றுமட்டுமே உள்ளவர் அதமப் பிராமணராகும். இம்மூன்றும் விட்டவரே அதமாதமப் பிராமணராம்.

ஆசாரம், ஒழுக்கம், ஞானம் இம்மூன்றும் இல்லாத சாதியாரே நீசரெனப்படுவர். இச்சாதியிலபிறந்த ஒருவன் ஆசாரத்தையும், ஒழுக்கத்தையும், ஞானத்தையும் பெறுவானுகில் அவனை அந்தணனென்றும் சொல்லத்தகும். அனுசார சாதியில் பிறந்து கேவலமான மாமிசங்களைப் புசித்த தோஷம் அற்பமாகும். தேடிக்கொண்ட புண்ணியமோ பெரிதாகும். மானக்கை என்ற தாசிக்கு தன் சாதித்தொழிலால் ஏற்பட்ட பாவங்களுக்கிடையில் புரிந்த புண்ணிய மேலீட்டால் சிவபெருமான் முத்திகொடுக்க வில்லையா? பெருநெருப்புக்கு சமமேது? இதனுதான் ரிஷி மூலம் நதி மூலம் பார்க்காதே, பத்தர்களிடம் எவ்வித தோஷமும் கற்பிக்காதே, என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

நந்தனர் முன்சென்மத்தில் ஒரு தபசியாக [illegible] ஆத்ம தோத்திரம் செய்த தோஷத்தால் நீசகுலத்தி[illegible] தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனுல் முன்செய்த புண்ணியத்தால் ஒழுக்

சுத்தையும் ஞானத்தையும் பெற்று அந்தணரும் வணங்கும் படியான பதவியையும் பெற்றார். ஆனால் அவர் ஞானத்தையும், ஒழுக்கத்தையும் பெறாமலிருந்தால் ஒருவரும் அவரைத்தீண்டா மாட்டார்களல்லவா? அதுபோல் இழிவான ஜாதியில் பிறந்த ஒருவன்,

எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பர்

என்றபடி அவன் கல்வி, அறிவு முதலானவைகளில் சிறந்தவனாகில் அவனுக்குச் சாதி நிர்ணயிப்பது பெருங் குற்றமேயாம். இதற்குத் திருஷ்டாந்தமாகப் பிறப்பில் கீழ்சாதியராக எண்ணப்பட்டவர்கள் உத்தியோகத்திற்கு வந்தபின் உயர்குலத்தவர்களால் எஜமானன் என்று அழைக்கப்பெறுவதையும் அவர்களுக்குக் குற்றேவல் செய்வதையும் பிரத்தியட்சமாகக் காணலாம்.

(வரும்), V. சேஷாத்திரி,
வீளமல்.

காத்த வைத்தியம்.

21-ம் பக்கத் தொடர்ச்சி.

2-வது சுரம் :—

சுரரோகியுற்றவர்களை முன்னிருத்தி தனது இருகரங்களால் உச்சிமுதல் உள்ளங்கால்வரை தொட்டுத் தொடாமலும் 21 எண்ணம் உள்ளவரை (Pass) தடவிவிட்டு சுரப்பிணி இப்போது எப்படி இருக்கிறது? என பிணியாளரைவினவி நோய் சிறிது குணிந்திருந்தால் 2 மணிக்குப்பின்பு திரும்பவும், அதேமாதிரி தடவவும். இப்படி 2 அல்லது 3 தடவை செய்தால் செய்கிறவரின் இரு கைகளிலிருந்து சுகுணமாகிய ஜீவகாந்தம் செய்யப் படுகிறவரின் சரீரத்தில் பாய்ந்து ஆச்சரியப் படும்படி சுகம் செய்விக்கும்.

இன்னொரு விதமாவது :—பிணியாளரை வடக்கு முக மாகத் தனக்குச் சமீபமாக ஓர் ஆசனத்திலமர்த்தி அவர் இரு விலாப்புறங்களில் தனதிரு உள்ளங்கை படும்படித் தொட்டு

இதோ எனது குளிர்ந்த ஜீவகாந்தமானது இம்மனிதனின் உடம்பில் பாய்ந்து சுர உஷ்ணத்தைத் தணித்து, குளிர்ச்சியையும், சுகத்தையும் தந்துகொண்டிருக்கிறதென்று ஒரே சிந்தனையாக உருக்கத்துடன் தியானம் செய்யவும். பிணியாளரின் சரீரமும் குளிர்ந்து தன்கைகளிலும் அவரின் சரீரத்திலும் வியர்வை உண்டாகும். உடனே கையையெடுத்துவிட்டு பின்னும் இதே மாதிரி 2 அல்லது 3 தடவை பாஸ் (Pass) செய்யவும். பின்பு தனது வலதுகையின் உள்ளங்கை படும்படி நெஞ்சில்வைத்து 5 நிமிஷம்வரை மேற்கண்டபடி தியானிக்கவும். அந்நோய் கிரமமாய் பறந்துபோகும்.

ஸ்திரீகளுக்குச் செய்யும் விதம் :—


சுரநோயுள்ள ஸ்திரீயை வடக்குமுகமாக அமர்ந்துகொள்ளும்படிசெய்வித்து மற்றொரு பிணியில்லாத பெண்மணியைக் கொண்டு மேற்கண்டவிதமாகச் செய்யச்சொல்லவும். ஜீவகாந்தப் பலனானது, செய்கிற பெண்ணின் கைவழியாகச் செய்யப்படுகிற பெண்ணின் சரீரத்தில் பாய்ந்து குணம் செய்துகொண்டு இருப்பதாகத் தன் இரு கண்களையும் மூடித் தன் புருவமத்தியில் காட்டம் வைத்துக்கொண்டு வெகு திடமாக சிந்தனை செய்யின் சில நிமிஷத்துக்குள் மாயமாய் அந்நோய் விலகிப்போகும்.

குறிப்பு :—இதுவும்தவிர சுத்தஜலம், சீனி, சாப்பிடும் ஆகாரம், ஔஷதம் இவைகளில் மெஸ்மெரிஸம் செய்தும் கொடுக்கலாம்.

மெஸ்மெரிஸம், ஹிப்னாட்டிஸம் செய்கிறவர்கள் முக்கிய மாகத் தமக்கு ஆத்ம தெய்வீக ஜீவகாந்த சக்தியை அப்பியாசத்தால் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டியது கடமையாகும். ஜீவகாந்த மெண்டல் போர்ஸ் என்னும் மனோதத்துவமானது சாதனை செய்யும் மார்க்கங்களின் வழியாக மின்னிப் பிரகாசிக்கும். அன்னவர்கள் உரோகங்களை நிமிடத்திற்குள் போக்கி குணம் செய்வித்தும், பேய், பில்லி சூனியம் முதலானவைகளைத் தெரித்தோடும்படிச் செய்தும், இந்திரம், மந்திரம், தெய்வகரணம்,

கோகாணம், அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, ஈசத்வம், வசித்வம், முதலிய சித்திமார்க்கங்களும், குப்தம் விலாயத் காரமத் ஆகிய அற்புதங்களைச் செய்தும் உலகத்தை சீர்திருத்தும் காருண்ய கருணாநிதியுமாயிருப்பார்கள்.

அப்பியாசப் படம்.



அப்பியாச முறைகள் :—

உயர்ந்த பாலீஷ் கெடாத கிராதம் 1 அடி நீளம் ½ அடி அகல முள்ளதாக எடுத்து அதன் ஒரு பக்கத்தில் ஒரு ரூபாய் வட்ட வடிவமுள்ள கெட்டிக் கறுப்பு சுத்தமை அடைத்துவைத்துக் கொண்டு சப்தமில்லாத ஒரு பலகை தயார் செய்துவைத்துக்கொண்டு அதில் வடபக்கச்சுவரில் தான் உட்கார்ந்துகொண்டு பார்க்கும் அளவுக்கு மேற் படத்தை ஒட்டி விட்டு 3-அடி தூரத்துக்கு அப்பால் இருந்துகொண்டு, அசைக்கண் பார்வையாக இமையாமல் 15 நிமிஷம் வரை பார்க்கப் பழகவேண்டும். இப்படி ஒருமாதம் பார்த்துவந்தால் கட்புலனுக்கும், தனது சரீர அங்கங்களுக்கும் ஜீவகாந்தப்பவர் ஜொலிக்கும். தினம் பிரகி ஒரு டயத்தைக் குறிப்பிட்டு அதேடயத்தில் ஒருநிமிஷமாவது முந்தாமலும் பிந்தாமலும் அப்பியாசம் செய்துவரவேண்டும். மேற்கூறிய படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது கறுப்புவட்டத்திலிருந்து ஒளிவு (பிரகாசம்) பக்கங்களிலிருந்து உண்டாகி பின் சில நாளைக்குள் அக்கறுப்பு மறைந்து பூர்ண பிரகாசமாகவே காணுதலெல்லாம் தெரியும். இப்படி ஒருவாரம் இருக்கக்கண்டால் மேற்கூறிய பட அப்பியாசம் முடிவடைந்துவிடும். (தொடரும்).

P. K. முகையதீன்பாக்ஷா சாஹிப்.

CHASTITY கற்புடைமை.

சகோதரிகாள்!

தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலான் பெண். (குறள்.)

[கற்பினின்றும் வழுவாமற் றன்னைக் காத்துத் தக்கோக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றுற் பேணி இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுபவளே பெண்ணெனப்படுவள்.]

அரிதினு மரிதாகிய மானிடப் பிறவியை அடைந்தவர்களில் ஆண்மக்கள், பிறவிப்பயனுகிய மோக்ஷ இன்பத்தை செய்தற்கரிய அறம், தவம், யோகம், பகவத் பக்தி முதலியவைகளால் அடைந்து தங்கள் ஜன்மத்தை பயனுள்ளதாகச் செய்து கொள்ளுகின்றனர். அப்படியாயின் பெண்மக்கள் உய்வதெங்ஙனம்? என்பதை விவரிப்போம். ஸ்திரீகள் தங்கள் ஜன்மத்தைப் பாழ்படுத்தாமல் கடைத்தேற ஒரே மார்க்கந்தானுளது; அது "கற்புடைமை," எனப்படும். அதுதான் மோக்ஷந்திற்குத் திறவுகோல். ஸ்திரீ புருஷர் இருபாலர்க்கும் அது பொதுவாயிருப்பினும் பெண்மக்களுக்கு இன்றியமையாதது. "காரிகையாருக்கு கணவனே தெய்வ" மென்றும், "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்றும் பெற்றோர்கள் கற்பிப்பதாலும் பெரியோர், கடவுள் முதலியவர்களை வழிபடும் வழியைக்கணவன் கற்பிப்பதாலும், "கற்பு" எனப் பெயர்பெற்றது.

"கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" அதாவது பெண்மக்களுக்குக் கற்பெனச் சொல்லப்படுவது கணவன்சொல்லை மீறி நடவாமை என்றும், "காவருனே பாவையற்கழகு" அதாவது கற்பிற்கு அழிவுவராமற்றன்னைப் பாதுகாத்தலே பெண்மக்களுக்கு அழகென்றும் தமது அறிவாகிய பூணைகொண்டு "தமிழ்" என்னும் சாகரத்தைக்கடந்த நமது அரும் பெருங் கிழவி ஔவைப்பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

"காசலுறு கற்புடைய மக்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்க தெய்வம்" என்றும்

"கற்பினின் மிகுத்ததொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்த பேர்கள்

மனிதர்கள் சரீரங்கள் போயினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றே", என்றும்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுக்
திண்மையுண் டாகப் பெறின் – என்றும்

கற்புடைய மனைவியைப் பெற்ற மனிதரின் பெருமையைப் பற்றி கூறி யிருக்கின்றார்கள். சுவி ஆரம்பித்து வெகுகால மாகியும் கற்புடையஸ்திரீகளின் மகிமையினூற்றான் இவ்வுலகம் நிற்கின்றது.

மூன்று உலகத்திலும் கற்புடைய ஸ்திரீயைக்கண்டு வணங்கும்பொருட்டு நாரதர் மடியிற் கூழாங்கற்களைக் கட்டிக்கொண்டு லக்ஷ்மி, சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி முதலியவர்களிடம் முறையே சென்று, "மிகவும் பசியாயிருக்கின்றது; இக்கற்களை பொரித்துத் தாருங்கள்" என்றார். இம்மொழியைக் கேட்டதும் அவர்கள் "உமக்குப் பித்தம் தலைக்கேறி யிருப்பதுபோற் றோன்றுகின்றது கற்கள் பொரியுமா? போம் ஐயா போம்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். பின்பு நாரதர், வசிஷ்டர் ஆச்சமஞ் சென்று வசிஷ்டர் மனைவி அருந்ததியிடம் கற்களைக் கொடுக்க அவள் தன் கணவன் நாமத்தைப் பழித்துக்கொண்டே அக்கற்களைத் தீயிலிட்டுப் பொரிக்க அவை கடலிலேபோற் பொரிந்தன என்றால் கற்பின் வல்லமையால் இயலாத காரியம் உளதோ? கற்பின் பலம் தபோபலத்திலுஞ் சிறந்ததல்லவா?

(தொடரும்.) V. சேஷாத்திரி,
விளமல்.

வைத்தியத் தொகுதி.

அன்புடையீர்!

மானிட தேகத்திலிருக்கும் உறுப்புகளையும் அவைகளின் தொழில்களையும் ஆரம்பத்தில் அறிந்துகொள்ளவேண்டியதவசியம்.

நிரோகியாயிருக்கையில் சரீரத்தில் சிலேத்துமம் 1 பங்கு பித்தம் 2 பங்கு, வாதம் 4 பங்கு வீதம் யிருக்குமாயில் வியாதி யில்லை.

மூளையானது புத்தியைத் தருகின்றது. இருதயமானது இரத்தத்தைத் திரேகமெங்கும் பரவச்செய்கின்றது. நுரை யீரலானது கெட்ட இரத்தத்தைப் பரிசுத்தப்படுத்துகின்றது. தினிப்பையானது புசிக்கும் அன்னபானதிகளைத் தங்கச் செய் கின்றது. பகிர்த்தண்டமானது பித்த நீரைச் சுரப்பிக்கின்றது. சிறு குடலானது அன்ன ரசத்தைக் கிரகித்து, இரத்தத்தில் சேர்த்துவிடுகின்றது. மூத்திரக்குண்டி காய்களும், சருமமும் இரத்தத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை மூத்திரம், வியர்வை ஆகிய இவைகளின் வழியாக வெளிப்படுத்துகின்றன. பீஜங்களானவை இந்திரியத்தைச் சுரப்பிக்கின்றன. கருப்பை யானது மாதாந்திர ருதுவை சுரப்பித்து கருவை வளர்க்கின்றது. இவ்விதமாக அந்த அந்த உறுப்புகளுக்கு தொழில் வெவ்வே றண்டு. உறுப்புகளின் தொழில் கிரமமாய் கடக்கிறவரையில் திரேகமும் சவுக்கிய நிலைமையிலிருக்கும். அவைகளின் தொழில் எப்போது விகற்பப்படுகின்றதோ அப்போதே திரேகத்திற்கு அசௌக்கியம் நேரிடுகின்றது. அதுவே (வியாதி) என்று சொல்லப்படும்.

காற்று பூமியிலிருந்து சுமார் 50 மைல் உயரம் அளாவி யிருக்கின்றது. பிராண வாயுவும், சமான வாயுவும், கலந்து கமது பிராணனுக்கு ஆகாரமாயிருந்து வருகின்றன. இவைகளில் 100-க்கு 20 பங்கு பிராணவாயுவும், 80 பங்கு சமானவாயுவும் இருப்பதில் கெட்டவாயுவும் நீராவியும் கலந்திருக்கிறது. சுவா சத்தால் வாயுவில் பேதமுண்டாகின்றது. வாயு சுவாசப்பைக் குள் போனபிறகு அதிலிருக்கும் பிராணவாயுவை இரத்தம் கிரகித்துக்கொண்டு இரத்தத்திலிருக்கிற கரியோடு கெட்ட வாயு வும் நீராவி ஜலமும் கலந்து வெளிப்படுகின்றது. கெட்ட வாயு அதிகப்படுதல், காற்றோட்டமில்லாத கும்பலில் சேர்வதாலும்,

அழுகிப்போன பதார்த்தங்கள், சாக்கடைகள், எரிகின்ற தீ இவைகளால் உண்டாகிக் காற்றில் சேர்ந்துகொள்கிறதும் உண்டு.

சுத்த ஜலத்திற்கு வாசனை, நிறம், ருசி இவைகள் கிடையாது. அவை பேதகமாயின் அசுத்த ஜலம் என்று சொல்லப்படும்.

சுர ரோகமானது சகல ரோகங்களுக்குந் தலைமையாயும் கொடிதாயுமிருக்கின்றது.

அவை 64 வகைகளாகச் சொல்லப்படுகின்றன. அவை யாவற்றையும் தெரிந்துகொள்வது சிரமம். கணநேரத்திற்கு வெவ்வேறுக மாறிவருகிற சுபாவம் உண்டு. ஆனதால் அவைகளில் 1-க்கு 16 வீதம் பாகம் செய்து நான்கு வகைகளாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். அவை அற்ப சுரம், சன்னிவாத சுரம், அதிசார சன்னிவாத சுரம், புனர்ச் சுரம், ஆ. 4.

இந்த நான்கு சுரத்திற்கும் பொதுவாக அவுஷதம் ஓமம், சுக்கு, அரத்தை, சிறு தேக்கு, சூரத்துநிலவேம்பு, வகைக்கு ரூபாய் எடை 3 இவைகளைத் தூள் செய்து மண் பாண்டத்தில் போட்டு 48 ரூபாய் எடை ஜலம் விட்டு 6 மணிநேரம் ஊறின பிறகு அடுப்பில்வைத்து எட்டில் ஒன்றாக பரிபாகம் செய்து வடிக்கட்டி சீனி சேர்த்து நாள் ஒன்றுக்கு மூன்று முறை கொடுத்துவரவும். வியாதி கடவுள் கிருபையால் சொஸ்தப்படும்.

(வரும்.) M. M. காதர்பாஷா ஸாயபு,
மருந்து ஷாப்,
விஜயபுரம்.

நற்போதம்.

1. புத்திமான்கள் காவியம், சாஸ்திரம், முதலியவைகளை ஆராய்ச்சிசெய்து அதனால் உண்டாகும் விநோதத்தினால் காலத்தைப் போக்குகிறார்கள், மூர்க்கர்கள் தூக்கத்தினாலும், தூக்கத்தினாலும், கலகத்தினாலும் காலத்தைக் கழிக்கிறார்கள்.

2. தக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஆயிரக்கணக்கான காரணங்கள் மூடர்களே காள்தோறும் அடைகின்றன. புத்திமான்களே ஒரு நாளும் அடைவதில்லை.

3. உலகம் ஒருவன் போனவழியே போகின்றது. பிராமணன் பசுவைக்கொன்றாலும் அதை உலகம் கம்புவதில்லை.

4. ஒருவனுக்கு உயிர் எவ்வளவு அருமையே அப்படியே பிற உயிர்கட்கும். மேலோர் தங்கள் உயிர்களையும் பிற உயிர்களையும் ஒப்பிட்டுப்பார்த்து பிற உயிர்களின்மேற் கருணைவைக்கிறார்கள்.

5. முன்பு உபகாரம் செய்யப்படாதவருக்கும், சன்மார்க்கநடையில் ஒழுகுபவர்க்கும், உதவி இன்றியமையாதவருக்கும், யாதொரு பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் கொடுத்தலே உண்மைத்தானமாம்.

6. பஞ்சேந்திரியங்களையும், மனதையும் அடக்கியாளும் திறமை இல்லாதவருடைய கருமம் யானையைக் குளிப்பாட்டுவதை யொக்கும்.

7. அனுபவமில்லா ஞானம், ஓர் கன்னிகை சிற்றின்ப சுகானுபவங்களைக் கூறியதை யொக்கும்.

8. களிமண்ணினால் தான் விரும்பிய உருவத்தைக் குயவன் செய்வதுபோல ஒருவன் தான் செய்யும் கருமத்தைக்கொண்டே அதன் பலனை அடைகிறான்.

9. குளிர்ந்திருக்கும்போது கரியானது கையை கறுமையாக்குகின்றது. உஷ்ணமாயிருக்கும்போது கையைத் தகிக்கின்றது. வஞ்சகர்கள் சந்தோஷகாலத்திலும் துக்ககாலத்திலும் பிறருக்குத் தீங்குவிளைவிக்கிறார்கள்.

10. ஒருவன் தான் செய்த கருமங்களின் நற்பயனையோ அற்பயனையோ, மூன்று வருஷத்திற்குள்ளாவது, மூன்று மாதத்திற்குள்ளாவது, மூன்று பட்சத்திற்குள்ளாவது, மூன்று நாட்களுக்குள்ளாவது இவ்வுலகிலேயே தவறுது அடைகின்றான்.

(இன்னும் வரும்.) V. சேஷாத்திரி, சரியதரிசி,
வாலிபர் சங்கம், விளமல்.

புவிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுள்மீது
மணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
ஞானபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாவணி என்னும்



கந்தப்புகழ்.



இதில் கவின் நாகரீக பாஷா வர்ணமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநுபல்லவிகள், பக்திரசக்கடலிலப்புகட்டி ஆனந்தபாஷ்பம் சொரியச்செய்யும் சரணங்கள், கெம்பீரமும் சோகரசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வரிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும் படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே! பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கப்பம் கொண்டு மெய்மறந்து பத்தி முத்தி அடையக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

முதற்பாகம் அணு 0—2—0 2-ம்பாகம் அணு 0—2—0
முருகர் தியானம் அணு 1. வேதாந்தபாஸ்கரன் அணு 1.

கருணைநிதி

ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்குப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மென்மேலும் சக்தியால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தி ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்ஜீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. வியாதிக்குத்தக்கபடி அவ்வப்போது மெஸ்மெரிசம் செய்து அனுப்பப்பெறும். பாலர் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம். எவ்வித பத்தியமும் கிடையாது. ஜீவகாருண்யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

2 அவுன்சுபாட்டில் 1-க்கு 0—8—0
—டஜன் ஒன்றுக்கு 5—0—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம் :—

மானேஜர்,
கருணைநிதி வர்த்தக சாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாதர். S. I. Ry.

ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது ஞாயமா! —ஆம்— ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்தகொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டே னென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென் கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் தாமரை நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மாணமவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி நீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல் லாம் கதை, கலியம், பகடி, பரிகாசவேடிக்கை வினையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்ற பிதற்று வதில் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனேயுண்ணல் தேனை எடுக்க வருபவரை யும் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமையாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும். ஏனெனில் எளிய கரடு முரடான வசன நடைகளைப்போலின்றி இனிமையான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் நீட்டி மிக அழகாயும், சமர சமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முதலாம்மனியர்கள், இஸ்லாக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காத வர்கள் வாஸ்தவத்தில் தர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துவாவுதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை நூ 1—0—0
யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணு 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம்—திருவாரூர். S. I. R.

PRINTED AND PUBLISHED By SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.